# போப்பே போத்தல பிரதேச சபை
# காலி மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, போப்பே போத்தல பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான போப்பே போத்தல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 2011 ஆம் ஆண்டிற்காகக் கிடைக்க வேண்டிய முத்திரை வருமானம் ரூபா 5,739,938 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 7,365,631 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் வருமானக் கடன்பட்டோர் ரூபா 1,625,693 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 103,976,287 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,113,401 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 9,140,220 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 6,100 | 7,355 | 20,339 |
| (ii) | வாடகை | 2,611 | 2,233 | 590 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 253 | 293 | 126 |
| (iv) | ஏனைய வருமானம் | 24,514 | 22,756 | 29,288 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 586,293 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 23,365,632 |

**2.2.3 கடைகளை வாடகைக்கு விடல்**

லபுதுவ வியாபாரத் தொகுதி மற்றும் கலேகான பொதுச் சந்தையின் 57 கடைகள் தொடர்பாக 2013 மே 03 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது உடன்படிக்கை செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(அ) லபுதுவ வியாபாரத் தொகுதி

(i) தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2010 திசெம்பர் 27 ஆந் திகதிய த.ப.பா/ப.பா.கொ/2010/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 05 ஆம் பந்தியின் பிரகாரம் கடைகளை வாடகைக்கு வழங்கும் போது சகல உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒது தடவை நாளதுவரையாக்கப்பட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் லபுதுவ வியாபாரத் தொகுதியில் 40 கடைகளின் வாடகை உடன்பக்கை புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாடகைத் தொகை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) கடை இலக்கங்கள் 09, 14, 15, 17, 26, 31, 34, 36, 38, 39 மற்றும் 40 என்பன மூடப்பட்டிருந்தன.

## 2.6 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் 2006 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய பீஈ/எப்/எஸ்/4(xiii) ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சுச் செயலாளரின் சுற்றுநிருபத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்